DATE:01.04.2025.
P.W.1 MOSES S/O.MUNUSAMY

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை:</u>**

எனக்கு மதுரை மாவட்டம் திருமங்கலம் சொந்த ஊர் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்யபடுவதற்கு முன்பாக பேராணாம்பட்டில் வசித்து வந்தேன் என்றால் சரிதான், நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கிறிஸ்துவ மத போதகராக இருந்து வருகிறேன். எதிரியை எனது உறவினர்கள் திலிப்குமார் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் மூலம் தெரியும். மேற்படி உறவினர்கள் எதிரியை 2021 ம் வருடம் கடைசி மாதங்களில் எனக்கு அறிமுகம் செய்தார்கள். 2021 ம் வருடத்திலிருந்து எத்தனை மாதங்கள் தொழில் தொடர்பாக எதிரி பேசி இருப்பார் என்றால் சுமார் 6 மாத காலங்கள் எதிரி தொழில் தொடங்குவது குறித்து என்னிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் எதிரி என்னிடம் கோலியாஸ் சாகுபடி செய்வதாக என்னிடம் கூறி இருந்தார். தொழில் தொடங்குவதற்கு எனது மேற்படி 2 உறவினர்களும் நானும் எதிரியுடன் கடன் உறுதி பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரிதான், மேற்படி பத்திரத்தில் எதிரிக்கு 5 இலட்சம் கடனாக கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கடன் கொடுத்தபோது திலிப்குமார் மற்றும் செந்தில்குமார் ஆகியோர் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி கடன் பத்திரத்தில் இயற்கை காரணங்களுக்காக சாகுபடி பாதிக்கப்பட்டால் ஏற்படும் நஷ்டத்தை 4 பேரும் பேசி தீர்த்துக்கொள்வதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பேராணாம்பட்டில் வசித்து வரும்போது கடந்த 08.04.2023 அன்று எதிரி ஒரு சட்ட அறிவிப்பை அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் சாகுபடியில் நட்டம் ஏற்பட்டதாகவும் திலிப்குமார் மற்றும் செந்தில்குமார் இருவரிடமும் 2,50,000 ஐ கொடுத்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார் என்றால் சரிதான். மேலும் அந்த அறிவிப்பில் தான் கடன் வாங்கியபோது நான்கு நிரப்பபடாத காசோலைகளை கையொப்பம் செய்து மட்டும் என்னிடம் வழங்கியுள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி அறிவிப்புக்கு நான் கடந்த 27.03.2023 அன்று பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எனது பதில் அறிவிப்பில் காசோலை எண் 584972–ல் 8,00000 ரூபாயும், காசோலை எண் 584971–ல் 7,50,000 ரூபாய்க்கும் எதிரி காசோலை வழங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மற்றொரு கடந்த 21.06.2023 அன்று நான் மற்றொரு வழக்கறிஞர் அறிவிப்பின் மூலம் காசோலை எண் 584971–ல் 7,50,000 ரூபாய்க்கு கொடுத்த காசோலையை பணமாக்க வங்கியில் செலுத்தியபோது Stop payment காரணத்திற்காக திரும்பியது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு எதிரி தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது என்றால் அது குறித்து ஞாபகம் இல்லை. கடந்த 20.09.2023 அன்று நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் காசோலை எண் 584973–ல் ரூ.5,00000 த்திற்கு எதிரி காசோலை வழங்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 28.04.2023 அன்று நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் காசோலை எண் 584971–ல் ரூ.7,50,000 த்திற்கு எதிரி காசோலை வழங்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி பதில் அறிவிப்பில் மேற்படி காசோலைகளை செக்யூரிட்டியாக அளித்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. எதிரி கடந்த 28.04.2023 அன்று நான் அனுப்பிய சட்ட அறிவிப்பில் தான் வேலூர் சார்பு நீதிமன்றத்தில் தன்னை நொடிப்பு

நிலைக்கு சென்றுவிட்டதாக அறிவிக்க கோரி வழக்கு தாக்கல் செய்து இருப்பதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். நான் பேராணாம்பட்டு காவல் நிலையத்தில் கடந்த 2023 ம் வருடம் எதிரி மீதும், செந்தில்குமார் மற்றும் திலிப்குமார் மீதும் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதை விசாரணை செய்த போலிஸ் அதிகாரி இது பணம் தொடர்பான பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்ள அறிவு றுத்தினார் என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் எதிரி காசோலைகள் வழங்கியதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கடன் அளித்தபோது செக்யூரிட்டிக்காக 5 காசோலைகளை எதிரி வழங்கினார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட காசோலையை தவிர்த்து மேலும் 4 எதிரியின் காசோலைகள் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. எதிரி பெற்ற 5 இலட்சம் கடனில் 250000 ஐ எனது உறவினர்களிடம் கொடுத்துவிட்டாரகள் என்றாலும் மீதமுள்ள தொகைக்கு செக்யூரிட்டியாக கொடுத்த காசோலையை பயன்படுத்தி எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. செந்தில்குமார் மற்றும் திலிப்குமார் எனது உறவினர்கள் என்பாதல் அவர்களிடம் பணத்தை கேட்காமல் எதிரியிடம் மட்டும் பணத்தை கேட்டு தொந்தரவு செய்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 02.04.2025 ஆம் தேதி பகரப்பட்டது.

ஓம்/– ஜோ.ஜெய்கணேஷ்,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காட்பாடி.